தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

25.10.2012 P.M

26.10.2012 A.M

## கடமை விவசாயம் ' செய்கிறோமே

இன்றைய உலகம் நவீனமயமாகிக் கொண்டிருக்கிறது. உலக வளங்களைத் தத்தமது அறிவாற்றலால் பெருவாரியான மக்கள் பயன்படுத்தி இன்புறத்தகுந்த பல்லாயிரக்கணக்கான தொழில் நுட்பங்களைப் பேரறிவாளர்கள் உருவாக்கி உலகுக்கு அர்ப்பணித்து வருகிறார்கள்.

இருப்பினும், அனைவரும் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழும் சூழ்நிலையை இன்னும் உருவாக்க முடியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது தேவையற்ற ஆசையும், அனுபவிக்க இயலாத அளவு சொத்துகளைச் சேர்த்து முடக்கி வைப்பதுமே ஆகும்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியத் தேவை அறிவுபூர்வமான உழைப்பும், அவ் உழைப்பினால் பெறப்படும் பலன்களுமே. ஆனால், மனித சக்தியாகிய இந்த உழைப்பு பல நிலைகளில் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்படுவதுடன், ஆக்க சக்தியாக மாற வேண்டிய உழைப்பு அழிவு சக்தியாக பல நேரங்களில் மாறிவிடுகிறது. உதாரணம், பல்வேறு வகையான போராட்டங்கள். அப்போராட்டங்கள் எழாமல் அடிப்படையிலேயே தடுக்கக்கூடிய செயல்களை "அரசுகள்' மேற்கொள்ளாததால் இனிமையான மனித வாழ்க்கை பலருக்குத் துயர் நிறைந்ததாக மாறிவிடுகிறது.

உதாரணமாக, கூடங்குளம் அணுமின் நிலையம். "பாதிக்கப்படுவோம்' என எதிர்பார்க்கின்ற அனைத்து மக்களுக்கும் மத்திய - மாநில அரசுகள் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினால் போராட்டங்கள் பலனற்றதாகிவிடும். அங்குள்ள மக்களுக்கு முழுச் சுகாதார வசதி, இலவசக் கல்வி, தரமான சாலை வசதி போன்ற பல்வேறு அத்தியாவசியத் திட்டங்களைப் பாதிக்கப்படுகின்ற இடங்களில் உருவாக்கினால் அங்குள்ள மக்களும் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

பல்லாயிரம் கோடி ரூபாயைத் தேவையில்லாமல் "கடன் தள்ளுபடி' என ஒட்டுமொத்தமாகச் செயல்படுத்தும் மத்திய - மாநில அரசுகளுக்கு அனைவரும் ஏற்கும் வகையில் நியாயமான அடிப்படைத் தேவைக்கு நிதி ஒதுக்குவது இயலாததல்ல.

ஆட்சியாளர்களும் பல்வேறு சூழ்நிலைகளில் ஆக்கப்பூர்வப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல், தாங்கள் நினைக்கின்ற பயனற்ற பல திட்டங்களை நிறைவேற்ற முயற்சிப்பதால் மக்களை மகிழ்விப்பதற்குப் பதிலாக ஆட்சியாளர்களே பிரச்னைகளில் சிக்கிக்கொள்ளும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இப்போதைய நிலையில் பெருவாரியான மக்கள் பயனடையும் வகையில், உற்பத்தியைக் கெடுக்காமல் உற்பத்திக்குப் பலனளிக்கும் நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும் அரசியல்வாதிகளே நல்ல ஆட்சியாளர்களாவர்.

நீர்ப்பாசனம் முதற்கொண்டு பாமர மக்களின் வாழ்வில் வளம் பெரும் வகையிலான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி நாடே மெச்சுகின்ற வகையில் செயல்படுகின்ற குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியும், பின் தங்கிய பிகார் மாநிலத்தை முன்னேற்றுவதில் வெற்றிகண்டுவரும் நிதீஷ் குமாரும் நல்லாட்சியாளர்களுக்கு சில உதாரணங்கள்.

அனைத்து வளங்களையும் உள்ளடக்கியிருந்தும், முன்னேற்றத் திட்டங்களை முந்தைய ஆட்சியாளர்கள் சரிவரச் செயல்படுத்தாததால் நக்சல்பாரிகளின் கடுமையான தாக்குதல்களை எதிர்கொண்டுள்ள பிகார் அரசு தற்போது முன்னேறும் மாநிலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

நம் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஆளுமைத்தன்மையை அனைவரும் அறிவர். அவர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் கூறிய முக்கிய வாக்குறுதிகளில் ஒன்று "தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக முன்னேற்றுவது' என்பதாகும்.

இவ்வாக்குறுதியை உண்மையாகவே செயல்படுத்திட பல வாய்ப்புகள் இருந்தபோதிலும் அவற்றை எல்லாம் இதுவரை திறம்படப் பயன்படுத்தவில்லை. இதனால் பல்வேறு மூல வளங்கள் நம் தமிழகத்தில் திறம்படப் பயன்படுத்திக் கொள்ளப்படாமல் வீணடிக்கப்பட்டு வருகின்றன.

உதாரணமாக, நீர்வள ஆதாரத்தைப் பயன்படுத்திக் கொள்வதிலுள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணா நிலை. தமிழகத்தின் மூன்று முக்கிய நீர்ப்பாசன ஆதாரங்களாக ஆறுகள், ஏரிகள் மற்றும் கிணறுகள் உள்ளன. இவைகளுள் சில ஆறுகளின் பாசன மேம்பாடு அண்டை மாநிலங்களான கர்நாடகம் (காவிரி), ஆந்திரம் (பாலாறு) மற்றும் கேரளம் (பெரியாறு) ஆகியவற்றின் தயவை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை தொடர்கிறது.

இருப்பினும், நம் மாநிலத்தின் மழை மூலம் முழுமையாக வளம் பெறுபவை ஏரிகள். எங்கெல்லாம் ஏரிகள் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் கிணற்றுப் பாசனமும் சிறப்பாகச் செயல்படுகின்றது.

ஆனால், தமிழக ஏரிப்பாசனத்தின் நிலை தற்போது மெச்சத்தகுந்த நிலையில் இல்லை என்பதே உண்மை. மிக முக்கியமாக, ஆண்டுதோறும் பெய்கின்ற வடகிழக்குப் பருவமழை மூலம் அனைத்து ஏரிகளின் சாகுபடி நிலங்களிலும் பெருவாரியாக நெல் மட்டுமே முக்கியப் பயிராக சாகுபடியாகிறது.

தமிழ்நாட்டில் 41,000-க்கும் மேற்பட்ட ஏரிகளின் பாசனப் பரப்பு 10 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமாகும். இது காவிரி டெல்டா சாகுபடி பரப்பைவிட இரு மடங்கு அதிகமாகும்.

தமிழக ஏரிப்பாசனம் சிறப்பிழந்து இருப்பதற்கான காரணங்கள் பலவாயினும் இரு முக்கிய காரணங்கள் ஏரிகளின் முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளன.

ஒன்று, "ஏரிகள் அனைத்தும் அதை உபயோகிப்பவர்களின் சொத்து' என்ற அடிப்படையில் 2000-ஆவது ஆண்டில் "தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன மேலாண்மைச் சட்டம்' உருவாக்கப்பட்டிருந்தும் இன்றுவரை இச்சட்டம் ஏரிப்பாசன விவசாயிகளைச் சென்றடையவில்லை. அதாவது இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு பெருவாரியான ஏரிப்பாசன விவசாயிகளுக்குத் தெரியவில்லை.

இரண்டு, மேற்கூறப்பட்ட நீர்ப்பாசன மேலாண்மை சட்டப்படி ஏரிப்பாசன சங்கங்களுக்கு அவைகளின் பயன்பாட்டுக்காக (பராமரிப்பு மற்றும் நிர்வாகம்) பல்வேறு வகையான நிதி ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டு இருந்தும் அவைகளில் ஒன்றைக்கூட இதுவரை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளும் நிலை இல்லை.

ஏனெனில் சட்டங்களும், அரசு ஆணைகளும் ஏரிகள் மேம்பாட்டுக்காக பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அவை அனைத்தும் இன்னும் செயல்வடிவம் பெறவில்லை. அதற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டிய வருவாய், பொதுப்பணித்துறை மற்றும் இதர துறை அதிகாரிகள் கைகட்டி, வாய்மூடி மௌனிகளாக உள்ளனர்.

இச்சூழலில் ஏரிப்பாசன விவசாயிகள் எதுவும் செய்வதறியாது இயற்கையின் கொடையாகிய மழை நீரைத் திறம்படச் சேமிக்க இயலாமல் கிடைத்தவரை லாபம் என்ற மனப்போக்கில் செயல்பட்டு "கடமை விவசாயம்' செய்து வருகின்றனர்.

அமைச்சர்களும் அதிகாரிகளும் என்ன செய்ய வேண்டும் என்பதை மேலும் தீவிரமாக அவர் ஆய்வுக் கூட்டங்களில் விவாதித்து காலவரம்புடன் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களைத் தயாரித்து அவை கால அட்டவணைப்படி நிறைவேறுகின்றனவா என்று மேற்பார்வை பார்த்தாலே பல பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

தகுதியும், திறமையும் உள்ள அமைச்சர்களையும், அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்து அவர்களிடம் முழு அதிகாரத்தையும், செயல்படக் குறைந்தபட்ச கால அவகாசத்தையும் அளித்து, பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதுதான் சரியான நிர்வாகமாக இருக்கும். அடிக்கடி நிகழும் அமைச்சரவை, அதிகாரிகள் மாற்றம் பிரச்னைகள் தீராமல் தொடர்வதற்குத் தலையாய காரணம் என்பதை முதல்வர் உணர்ந்து செயல்பட வேண்டும்.

விவசாயம், தொழில்துறை, நெசவாளர்கள், சிறுதொழில், வர்த்தகம், மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மோட்டார் வாகனப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளோர், தொழிற்சாலை அதிபர்கள் ஆகியோரை குறிப்பிட்ட கால இடைவெளியில் நேரில் சந்தித்து விவாதித்துவந்தால் பிரச்னைகளை உடனுக்குடன் களையவும் தேவைப்படும் உதவிகளை அளிக்கவும் பேருதவியாக இருக்கும்.

மின் பற்றாக்குறையும், நீர்ப்பாசன மேலாண்மையும்தான் தமிழகம் எதிர்கொள்ளும் இரண்டு மிகப்பெரிய சவால்கள். இவை இரண்டும் போர்க்கால அடிப்படையில் எதிர்கொள்ளப்பட வேண்டும்.

மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தவும் நேர்மையும் அனுபவமும் உள்ளவர்களை சிறப்பு ஆலோசகர்களாக நியமிப்பதும் நிர்வாகத்தை நன்கு நடத்த உதவும்.

## மொத்த உணவு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு வீணாகிறது

உலகில் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பண்டங்களில் மூன்றில் ஒரு பங்கு வீணாகிறது என்று ஐ.நா. உணவு மற்றும் வேளாண் கழகம் (எஃப்ஏஓ) தெரிவித்துள்ளது.

இது குறித்து அதன் இயக்குநர் ஜெனரல் ஜோஸ் கிரேஸியனோ டா சில்வா, ஐ.நா.வின் அதிகாரபூர்வ இணையதளத்தில் கூறியிருப்பதாவது:

வீணாகும் உணவுப் பண்டங்கள் மூலம் 50 கோடி மக்களுக்கு கூடுதலாக உணவிட முடியும்.

நடுத்தர மற்றும் உயர் வருமானம் மிக்க நாடுகளில் உள்ள அதீத நுகர்வுக் கலாசாரம்தான் இந்த வீணடித்தலுக்குக் காரணம்.

உலகில் 86.8 கோடி மக்கள் போதிய ஊட்டச்சத்து கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 105 கோடி மக்கள் அதிக உடல்பருமனைக் கொண்டுள்ளனர். பட்டினியில்லா நிலை என்ற இலக்கை அடைவதற்கு, உணவு வீணடிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

நமது வாழ்நாளுக்குள்ளாக பூமியில் இருந்து பட்டினியை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உணவு மற்றும் வேளாண் அமைப்புகள் உறுதி பூண வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஜோஸ் கிரேஸியனோ டா சில்வா.

ஆண்டுதோறும் தொழில் வளர்ச்சிமிக்க நாடுகளில் 68 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் (சுமார் ரூ.36.57 லட்சம் கோடி) மதிப்பிலான உணவுப் பொருள்களும்; வளரும் நாடுகளில் 31 ஆயிரம் கோடி அமெரிக்க டாலர் (சுமார் ரூ.16.67 லட்சம் கோடி) மதிப்பிலான உணவுப் பொருள்களும் வீணடிக்கப்படுகின்றன என்று ஐ.நா. விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25th oct 2012 P.M

**நெல்லை மாவட்ட அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

வடகிழக்கு பருவ மழை நீடித்து வருவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதேபோல மானாவாரி குளங்களுக்கு நீர்வரத்து வரத் தொடங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

தென்மேற்கு பருவ மழை பொய்த்ததால் தாமிரவருணி பாசனத்தில் கார் பருவம் சாகுபடி செய்யவில்லை. தற்போது வடகிழக்கு பருவ மழை தொடங்கி பெய்து வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் மழைநீடித்து வருவதால் இம் மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மானாவாரி குளங்களுக்கும் நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது.

புதன்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை (மி.மீட்டரில்): பாபநாசம் அணை 78, பாபநாசம் கீழ் அணை 28, சேர்வலாறு அணை 35, மணிமுத்தாறு அணை 105.6, கடனாநதி அணை 40, ராமநதி அணை 22, அம்பாசமுத்திரத்தில் 58.3, சேரன்மகாதேவியில் 28.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 2011.34 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 913 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 378.43 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 134 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பருவ மழை நீடித்து வருவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

உயர்ந்து வரும் நீர்மட்டம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2 நாளில் 6 அடி உயர்ந்து 58.05 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 74.61 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 54.65 அடியாகவும், கடனாநதி 7 அடி

உயர்ந்து 69 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்து 78.50 அடியாகவும் இருந்தது.

அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் பருவ மழை நீடித்து வருவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மானாவாரிக் குளங்களுக்கும் நீர்வரத்து வரத் தொடங்கியுள்ளது.

ஆகவே பிசான பருவ சாகுபடிக்காக நாற்று பாவும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## பயிர்சேதம் குறித்து தொலைபேசியில் தெரிவிக்கலாம்

வடமதுரை வட்டாரத்தில் பருவமழை காரணமாக பயிர் சேதம் ஏற்பட்டால், 04551 -238088 என்ற தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம், என வடமதுரை வட்டார வேளாண் உதவி இயக்குநர் அ. ராணி தெரிவித்துள்ளார்.

இது குறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகி உள்ளதால், திண்டுக்கல் மாவட்டத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இந்நிலையில், வடமதுரை வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பயிர்சேதம் குறித்த விவரங்களை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள 04551-238088 என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடர் மழையால் தக்காளி விலை உயர்வு

தம்மம்பட்டியில் தொடர் மழையால் தக்காளி வரத்துக் குறைந்ததால் விலை உயர்ந்தது.

தம்மம்பட்டியிலுள்ள தக்காளி மண்டிகளுக்கு சுற்றுவட்டாரத்திலுள்ள 45-க்கும் மேலான ஊர்களிலிருந்து தக்காளி கொண்டு வரப்படுகிறது.

தொடர் மழைக்கு முன்னர் நாளொன்றுக்கு சராசரியாக 500 கூடைகளில் தக்காளி வந்தது. அப்போது 17 கிலோ கொண்ட பெட்டி ரூ.85-க்கு ஏலம் போனது.

புதன்கிழமையன்று மண்டிகளுக்கு மொத்தம் 90 கூடைகளில்தான் தக்காளி வந்தது. இதனால், 17 கிலோ கொண்ட தக்காளி பெட்டி 220 ரூபாய் வரையில் விற்பனையானது. சில்லறை விற்பனையில் ஒரு கிலோ தக்காளி ரூ. 15 முதல் ரூ.20 வரை விற்பனையானது.

தொடர் மழையால் தக்காளிச் செடிகளிலிருந்து பூக்கள் உதிர்ந்துவிட்டதால் தக்காளி வரத்து குறைந்ததாகவும், மழை நீடித்தால் தக்காளி வரத்து மேலும் குறைந்து, விலை மேலும் உயரும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

## ஆவின்பால் 100 சதவீதம் தரமானவை : அதிகாரிகள் விளக்கம்

ஆவின் பால் பண்ணைகளில் 19 விதமான பரிசோதனைகளுக்குப் பின்னர் 100 சதவீதம் தரமான பாலை வழங்குகிறோம் என ஆவின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில், அத்தியாவசியப் பொருளான பாலில் 68 சதவீதம் கலப்படம் இருப்பதாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்தது.

இந்த நிலையில், ஆவின் நிர்வாகத்தினர் கூறியது: தமிழகத்தைப் பொறுத்தவரையில் பால் கொள்முதல் செய்யப்படும் இடங்களில் தரம் பற்றி சோதனை நடத்தப்படுகிறது. பாலை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு சுத்தமாக பால் கறப்பதற்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து பண்ணைக்கு பால் கொண்டு வருவது வரை 19 கட்டமாக பரிசோதனைகள் செய்யப்படுகிறது. அதை மக்களுக்கு 100 சதவீதம் தரமான பாலாக விநியோகிக்கப்படுகிறது. பாக்கெட்டில் அடைத்து விற்கும் பாலிலும் அதே தரம் கிடைக்கும் வகையிலும் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. பால் தயாரிப்பு குறித்து அறிய தினமும் பண்ணைகளுக்கு வரும் மாணவர்களுக்கு, எவ்வித ஒளிவு மறைவும் இல்லாமல் அனைத்து பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டப்படுகிறது. எனவே, எந்த நேரத்திலும் ஆவின் பால் தரத்தை சோதனை செய்து கொள்ளலாம் என ஆவின் நிர்வாகத்தினர் கூறினர்.

## புத்தடியில் ஏலக்காய் வர்த்தகம் தொடங்கியது : 42 ஆயிரம் கிலோ விற்பனை

ஏலக்காய் வர்த்தக நிறுவனங்கள் சார்பில், கேரளத்தில் உள்ள புத்தடி ஸ்பைசஸ் பார்க்கில் புதன்கிழமை வர்த்தகம் தொடங்கியதில், மொத்தம் 42 ஆயிரம் கிலோ ஏலக்காய் விற்பனை செய்யப்பட்டது.

கேரளம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள புத்தடி, தமிழகத்தில் தேனி மாவட்டத்தில் உள்ள போடி ஆகிய இடங்களில் ஸ்பைசஸ் வாரியத்தின் கட்டுப்பாட்டில் 8 ஏலக்காய் வர்த்தக நிறுவனங்கள் மூலம் இ-டிரேடிங் முறையில் ஏலக்காய் வர்த்தகம் நடைபெற்று வருகிறது.

ஏலக்காய்க்கு மதிப்பீட்டு நிர்ணய விலையில் இருந்து ஏலம் கோரும் தொகையை கிலோ ஒன்றுக்கு ரூ. 5 வீதம் படிப்படியாக அதிகரித்து கேட்கவேண்டும் என்று ஸ்பைசஸ் வாரியம் உத்தரவிட்டது. இதற்கு, வியாபாரிகள் தரப்பில் எதிர்ப்பு தெரிவித்து, கடந்த செப். 25-ம் தேதி முதல் வர்த்தகத்தை புறக்கணித்தனர். இதனால், பல கோடி ரூபாய் மதிப்பிலான ஏலக்காய்கள்

தேக்கமடைந்தன. எனவே, சந்தை மதிப்பு தெரியாமல் கை விலைக்கு விவசாயிகள் ஏலக்காயை விற்பனை செய்து வந்தனர். ஏலக்காய் வர்த்தகத்தை மீண்டும் தொடங்குவது குறித்து, வியாபாரிகள் சங்கம், விசாயிகள் மற்றும் ஸ்பைசஸ் வாரியம் ஆகியவற்றுக்கு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப் பிரச்னை குறித்து, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சார்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கின் மீது விசாரணை நடத்திய கேரள உயர் நீதிமன்றம், ஏலம் கோரும் தொகையை நிர்ணயித்து, வர்த்தகத்தை உடனடியாக தொடங்க ஸ்பைசஸ் வாரியத்துக்கு உத்தரவிட்டது.

இதையடுத்து, ஏலக்காய் வர்த்தகத்தில் மதிப்பீட்டு நிர்ணய விலையில் இருந்து ஏலம் கோரும் தொகையை கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் அதிகரித்து கேட்கவேண்டும் என்று ஸ்பைசஸ் வாரியம் சார்பில் வரையறுக்கப்பட்டு, புதன்கிழமை புத்தடியில் உள்ள ஸ்பைசஸ் பார்க்கில் கே.சி.பி.எம்.சி., சௌத் இன்டியன் கிரீன் கார்டமம் கம்பெனி ஆகிய ஏலக்காய் வர்த்தக நிறுவனங்கள் சார்பில் இ-டிரேடிங் மீண்டும் தொடங்கியது. இந்த வர்த்தகத்தில் மொத்தம் 42 ஆயிரம் கிலோ ஏலக்காய் விற்பனையானது. சராசரி விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 674 ஆக இருந்தது.

உயர்ந்தபட்ச விலை ரூ. 906 ஆகவும், குறைந்தபட்ச விலை ரூ. 366 ஆகவும் இருந்தது. வியாழக்கிழமை (அக்.25) ஹீடர் நிறுவனம் சார்பில், ஏலக்காய் வர்த்தகம் நடைபெறுகிறது.

வியாபாரிகள் சங்கம் புறக்கணிப்பு: இந்த வர்த்தகத்தில் போடி, கம்பம், குமுளி ஆகிய இடங்களில் உள்ள ஏலக்காய் வியாபாரிகள் சங்கத்தினர் கலந்து கொள்ளவில்லை. வழக்கமாக 60-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்துகொள்ளும் ஏல வர்த்தகத்தில், புதன்கிழமை 21 வியாபாரிகள் மட்டுமே கலந்துகொண்டனர்.

ஸ்பைசஸ் வாரிய முன்னாள் துணைத் தலைவர் ஆர்.டி. அசோக்குமார் கூறியது: புதன்கிழமை நடைபெற்ற ஏலக்காய் இ-டிரேடிங்கில் ஸ்டெடி மார்க்கெட் நிலவியது. விரைவில் வழக்கம்போல அனைத்து வியாபாரிகளும் வர்த்தகத்தில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், விலை படிப்படியாக உயர்வதற்கு வாய்ப்புள்ளது என்றார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

26.10.2012 A.M

## காளான் வளர்ப்பு பயிற்சி

சிவகாசி:- எஸ்.எப்.ஆர்., மகளிர் கல்லூரி தாவரவியல் துறை, புத்துணர்வு இயக்கம், என்.எஸ்.எஸ்., அமைப்பும் இணைந்து, சரஸ்வதிபாளையம் குறிஞ்சி மகளிர் குழுவினருக்கு, காளான் வளர்ப்பு பயிற்சி வழங்கினர். காளான் வளர்ப்பு தொழில் நுட்ப பயிற்றுனர்கள் கே.பரணி, ஜே.வள்ளிமயில், சிப்பி காளான் வளர்ப்பு முறையும், விதை வளர்ப்பு முறை பற்றி விளக்கினர்.

## விவசாய பணிகள் சுறுசுறுப்பு மானிய விலையில் வழங்க 350 டன் நெல் விதைகள் தயார்

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் மழை பெய்ததை தொடர்ந்து வேளாண் பணிகள் சுறுசுறுப்படைந்து வருகிறது. விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல் விதை வழங்க 350 டன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்த மழை காரணமாக மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் விவசாய பணிகள் சுறுசுறுப்படைய துவங்கியுள்ளது. நெல் சாகுபடி செய்யும் பகுதியில் உள்ள வயல்களில் நெல் சாகுபடிக்கு முன்பாக செய்ய வேண்டிய முன்னேற்பாடு பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.விவசாயிகளுக்கு தேவையான நெல் விதை, பயறு விதைகள் உள்ளிட்டவற்றை வழங்குவதற்கு வேளாண்மைத்துறையினரும் தயார் நிலைக்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது. கலெக்டர் ஆஷீஷ்குமார் உத்தரவின் பேரில் வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ், துணை இயக்குனர் சீனிவாசன் மற்றும் அதிகாரிகள் இதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாக வேளாண்மைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.இது குறித்து அந்த வட்டாரங்கள் கூறியதாவது;தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் நெல்விதை வழங்குவதற்கு 350 டன் நெல் விதை தயார் நிலையில் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் இம் மாவட்டத்திற்கு 250 டன் நெல் விதை போதும் என்றாலும், தட்டுப்பாடு எதுவும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகவும், மழை நல்ல முறையில் பெய்துள்ளதால் கூடுதல் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு கூடுதலாக 100 டன் நெல் விதையினை இருப்பு வைத்துள்ளோம்.ஒரு கிலோ நெல் விதைக்கு விவசாயிகளுக்கு 5 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. உளுந்து, பாசிப்பயறு, வாழை புதுரக விதைகளான கோ 7, வம்பன் 4 தயார் நிலையில் இருப்பு

வைக்கப்பட்டுள்ளது. இந்த புதுரக விதைகள் மஞ்சள் தேமல் நோய் தாக்காத ரகங்கள் என்பதால் விவசாயிகள் இதனை பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தி வருகிறோம்.மொத்தம் 80 டன் பயறு வகை விதைகள் இருப்பில் உள்ளது. தேவைக்கு ஏற்ப விவசாயிகள் இதனை வாங்கிச் செல்லுமாறு வேளாண்மை அலுவலர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை, ஓட்டப்பிடாரம், கயத்தார், கடம்பூர், கோவில்பட்டி, புதூர், விளாத்திகுளம், செய்துங்கநல்லூர் பகுதியில் பயிர்கள் அதிகமான சாகுபடி இருக்கும் என்பதால் அந்த விவசாயிகள் உடனடியாக விதைகளை பெற்றுச் செல்லுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.இதே போல் புதிய அறிமுகமாக கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள பயறு ஒன்டர் என்கிற நுண்ணூட்ட சத்து கொண்ட விதை 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு வந்துள்ளது. அதிக பூக்களை உருவாக்க கூடிய இந்த ரகத்தின் விதைகளை விவசாயிகள் மாவட்டத்தின் அனைத்து பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்று வேளாண்மைத்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகில் வீணாகும் உணவில் 50 கோடி பேர் பசியாறலாம்



புதுடில்லி: ஆண்டுதோறும், சர்வதேச அளவில் வீணாக்கப்படும் ஒட்டு மொத்த உணவைக் கொண்டு, 50 கோடி பேருக்கு உணவு அளிக்கலாம் என, ஐ.நா.,வின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (எப்.ஏ.ஓ.,) தெரிவித்துள்ளது.உலகளவில், ஆண்டுதோறும் உற்பத்தியாகும் உணவில், மூன்றில் ஒரு பங்கு வீணாக்கப்படுகிறது. குறிப்பாக, வளர்ச்சியடைந்த நாடுகளில், 68 ஆயிரம் கோடி டாலர் மதிப்பிலான உணவுப் பொருள் வீணாக்கப்படுகின்றன. வளரும் நாடுகளில் இதன் மதிப்பு, 31 ஆயிரம் கோடி டாலர் என்ற அளவில் உள்ளது.

இதற்கு, நடுத்தர மற்றும் அதிக வருவாய் கொண்ட நாடுகள், அதிகளவில் நுகர வேண்டும் என்ற மனப்பாங்கே முக்கிய காரணம் என, எப்.ஏ.ஓ., ன் தலைமை இயக்குனர் ஜோஸ் கிராசியானோடி சில்வா தெரிவித்தார்.இதற்கு எடுத்துக்காட்டாக, 150 கோடி பேர் அதிக எடையுள்ளவர்களாக இருக்கும் அதேசமயம், 87 கோடி பேர் ஊட்டச்சத்து பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.எனவே, எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு, உணவுப்

பொருட்களை சேமித்து வைக்கும் வகையில், நடவடிக்கை மேற்கொள்ள பல்வேறு நாடுகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என, எப்.ஏ.ஓ., மேலும் தெரிவித்துள்ளது.திருமணம் மற்றும் ஏனைய சமுதாய விழாக்களில்தான் அதிகளவு உணவுப் பொருட்கள் வீணாக்கப்படுகின்றன. இது மிகவும் கண்டிக்கத்தக்கது.எனவே, இதனை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ், தெரிவித்தார்.

**ஊராட்சி தலைவர்களுக்கு உழவர் பாதுகாப்பு ஆலோசனை**

விழுப்புரம்: உழவர் பாதுகாப்பு திட்டம் குறித்து ஊராட்சி தலைவர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. விழுப்புரத்தில் உள்ள முண்டியம்பாக்கம் கரும்பு விவசாயிகள் மண்டபத்தில் நடந்த கூட்டத்திற்கு சமூக பாதுகாப்பு தனி தாசில்தார் வெற்றிவேல் தலைமை தாங்கினார். மண்டல துணை தாசில் தார்கள் பார்த்தீபன், இளங் கோவன், ஜெயச்சந்திரன் முன்னிலை வகித்தனர். உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பயனாளிகள் திருமணம், முதியோர், கல்வி உதவிதொகைகள் பெறும் வழிமுறைகள் குறித்தும், வரும் 5ம் தேதி முதல் 9ம் தேதி வரை நடைபெறும் சிறப்பு முகாம் பற்றியும் ஆர்.டி. ஓ, ராதாகிருஷ்ணன் விளக்கமளித்தார். வளவனூர் பேரூராட்சி சேர்மன் முருகவேல், வருவாய் ஆய்வாளர்கள் பிரபாகரன், ரவிசங்கர், சிவக்குமார், அலுவலக உதவியாளர்கள் குணசேகரன், கோவிந்தராஜ் மற்றும் ஊராட்சி தலைவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கோமுகி அணையில் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி கோமுகி அணையிலிருந்து விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசனம் பெற உள்ளது.தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பெய்த வடகிழக்கு பருவ மழையில் விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி கோமுகி அணை நிரம்பியது. மொத்த கொள்ளள வான 560 மில்லியன் கன அடியில் (46 அடி), தற்போது 489 மில்லியன் கன அடிக்கு (44 அடி) நீர் பிடிப்பு உள்ளது. தமிழக முதல்வர் ஜெ., உத்தரவையடுத்து விவசாய பாசனத்திற்கு கோமுகி அணையிலிருந்து நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஊரக தொழில் துறை அமைச்சர் மோகன் தலைமை தாங்கினார். அழகுவேலுபாபு எம்.எல்.ஏ., கலெக்டர் சம்பத், மாவட்ட வருவாய் அலுவலர் பிருந்தாதேவி, திட்ட இயக்குனர் முத்துமீனாள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சின்னராஜ், உதவி செயற்பொறியாளர் முரளிதரன் உடனிருந்தனர். அடுத்த மாதம் 8ம் தேதி வரை 15 நாட்களுக்கு பழைய பாசன பகுதிக்கு வினாடிக்கு 60 கன அடி, புதிய பாசனப் பகுதிக்கு 50 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தொடர்ந்து 9ம் தேதி முதல் 23ம் தேதி வரை 45 நாட்களுக்கு பழைய பாசனப்பகுதிக்கு 120 கன அடி, புதிய பாசன பகுதிக்கு 100 கனஅடி

தண்ணீரும் திறந்து விடப்படும். இதனால் பழைய பாசனப் பகுதியில் 5,860 ஏக்கர் நிலமும், புதிய பாசனப் பகுதியில் 5,000 ஏக்கர் நிலமும் பயன் பெறுகிறது.

## வறண்டு கிடந்த தென்பெண்ணையில் தண்ணீர் வரத்து துவங்கியது

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் தென்பெண்ணையில் நீண்ட நாட்களுக்கு பிறகு பருவமழை காரணமாக தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. ஒரு காலத்தில் வற்றாத ஜீவநதியாக இருந்த தென்பெண்ணையில் இப்போதெல்லாம் தண்ணீரை பார்ப்பது அரிதாகி விட்டது. கர்நாடக மாநிலம் நந்திதுர்காவில் உருவெடுக்கும் தென்பெண்ணையின் குறுக்கே கர்நாடக அரசு ஏராளமான தடுப்பணைகளை கட்டியதுதான் இதற்கு காரணம். தமிழக எல்லையில் மணல் கொள்ளையர்கள் பல மீட்டர் ஆழத்திற்கு பள்ளம் தோண்டி மணலை அள்ளிவிட்டதால், சமீபகாலமாக வறண்ட தென்பெண்ணையைதான் காண முடிகிறது. ஆற்றில் தண்ணீர் வழிந்தோடுவதை பார்ப்பதே அரிதான காட்சியாகிவிட்டது. கடந்த சில நாட்களாக பெய்துவரும் வடகிழக்கு பருவமழை காரணமாக நேற்று திருக்கோவிலூர் தென்பெண்ணையில் தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. மழை மேலும் நீடிக்கும் பட்சத்தில், திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணை நிரம்பினால் மட்டுமே வெள்ளப்பெருக்கை காண முடியும். அதுவரை ஆற்றில் தற்போது வழிந்தோடும் தண்ணீரை பார்த்து ஆறுதல் அடைந்து கொள்ள வேண்டியதுதான்.

## தமிழகம் , கேரளாவில் முட்டை விலை 310 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 310 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை, மீண்டும் ஏற்றம் காண துவங்கியிருப்பது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில், மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நநாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 300 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசுகள் உயர்த்தி, 310 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒரு வாரத்துக்கு முன், முட்டை விலை இறங்கு முகமாக இருந்தது. இச்சூழலில், இரண்டு தினங்களாக, முட்டை விலை ஏற்றம் காண துவங்கியிருப்பது, கோழிப்பண்ணையாளர்களை, மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்: சென்னை, 305 காசுகள், பெங்களூரு, 300 காசுகள், மைசூரு, 300 காசுகள், ஹைதராபாத், 288 காசுகள், மும்பை, 318 காசுகள், விஜயவாடா, 286 காசுகள், கோல்கத்தா, 332 காசுகள், பார்வாலா, 317 காசுகள், டில்லி, 331 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை இரண்டு ரூபாய் உயர்த்தி, கிலோ, 54 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, இரண்டு ரூபாய் உயர்த்தி கிலோ, 62 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## கோமுகி அணை பாசன நிலங்களில் வேளாண் இணை இயக்குனர் ஆய்வு

கச்சிராயபாளையம்: கோமுகி அணைப்பகுதிகளில் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் ஆய்வு செய்தார். கோமுகி பகுதியில் உள்ள விளைநிலத்தில் பயிரிடப்பட்டுள்ள விதைநெல் நாற்றங்கால் விளைச்சலை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் நேற்று நேரில் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது: மாவட்டத்தின் சராசரி மழை அளவு 1060 மில்லி மீட்டர். இதுவரை மழை 680 மில்லி மீட்டர் அளவு மட்டுமே பெய்துள்ளது. இதனால் சராசரியாக முப்பது சதவீதத்தில் இருந்து ஐம்பது சதவீதம் மட்டுமே நீர் நிலைகளில் மழையின் அளவு சேமிக்கப்பட்டுள்ளது. கிணறுகளிலும் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அக்டோபர் 15 தேதிக்குப் பிறகு மழை பெய்துள்ளதன் அடிப்படையில் தற்போது விவசாயம் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. கோமுகி அணையின் பாசனநீரை பயன்படுத்தி விவசாயம் செய்யும் விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன் படுத்தி அதிக அளவிலான பரப்பளவில் விவசாயம் செய்து விளைச்சலை அதிகப்படுத்த வேண்டும். கடைமடைப் பகுதிகளில் மக்காச்சோளம் போன்ற சிறு தானிய பயிறு வகைகளை பயிரிட்டு பயன்பெறலாம். மாவட்டத்தில் பெரும்பாலும் திருந்திய நெல் சாகுபடி முறையிலேயே அதிகளவில் விவசாயிகள் நெல் நடவு செய்துள்ளனர். விவசாயிகளுக்கு வழங்கிட தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடி முறையில், மேட்டுப்பகுதி நாற்றங்கால் விட்டு நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு மூன்று கிலோ விதை நெல் போதுமானது. விவசாயிகளுக்கு விதை நெல் விநியோகம் செய்வதற்கு ஆயிரத்து முன்னூறு மெட்ரிக் டன் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது கூடுதலாகவே நூற்று அறுபது டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் தெரிவித்தார்.ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர்கள் தர்மலிங்கம், கோவிந்தன், பழனிவேல், வேளாண் அலுவலர் பொன்னுராசு, உதவி வேளாண் அலுவலர் மொட்டையப்பிள்ளை, அலுவலக உதவியாளர்கள் துரை, முருகேசன் உடனிருந்தனர்

## அரசு மானிய உதவியுடன் தனியார் கோழி பண்ணை

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி அருகே அரசு மானியத்தில் அமைக்கப்படும் கோழி பண்ணை கட்டுமான பணியை அமைச்சர் மோகன் துவக்கி வைத்தார். கள்ளக்குறிச்சி அடுத்த கரடிசித்தூர் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ் மனைவி தங்கமணி என்பவருக்கு கோழிப்பண்ணை அமைக்க அரசு மானிய உதவி அளித்துள்ளது. அரசு திட்டத்தின்படி கோழி பண்ணை அமைப்பதற்கான கட்டுமானப் பணியை அமைச்சர் மோகன் துவக்கி வைத்தார். இதில் அழகுவேலுபாபு எம்.எல்.ஏ., கலெக்டர் சம்பத், மாவட்ட வருவாய் அலுவலர் பிருந்தாதேவி, திட்ட இயக்குனர் முத்துமீனாள், ஆர்.டி.ஓ., ராஜசேகரன், தாசில்தார் வைகுண்டவரதன், கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் அழகரசன், நகர் மன்ற சேர்மன் பாலகிருஷ்ணன், ஒன்றிய சேர்மன்கள் ராஜசேகர்,

அரசு, ராஜேந்திரன், பேரூராட்சி சேர்மன் வெங்கடேசன், கால்நடை துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர்கள் மணி, ராயப்பன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## ஓசூர் உழவர் சந்தையில் 222 டன் காய்கறிகள் விற்பனை

ஓசூர்: ஓசூர் உழவர் சந்தையில், ஆயுதபூஜை, விஜயதசமியையொட்டி, 222 டன் காய்கறிகள் விற்பனையானது.ஓசூர் உழவர்சந்தை, காய்கறிகள் விற்பனையில் தமிழகத்தில் முதல் இடத்தில் செயல்படுகிறது. இங்கு ஆவலப்பள்ளி, கெலரவப்பள்ளி, பாகலூர், பேரிகை, பேளகொண்டப்பள்ளி, பூனப்பள்ளி உள்ளிட்ட ஓசூர் சுற்றுடவட்டார கிராம பகுதிகளில் இருந்து விவசாயிகள் தினம், 120 டன் முதல் 150 டன் காய்கறிகள், பூக்கள், பழங்கள் வரை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.சனி மற்றும் ஞாயிறு மற்றும் பண்டிகை காலங்களில், உழவர்சந்தைக்கு, 150 டன்னுக்கு மேல் காய்கறிகள் விற்பனைக்கு வரும். நேற்று முன்தினம் ஆயுதபூஜை, நேற்று விஜயதசமியையொட்டி உழவர்சந்தைக்கு அதிகளவு காய்கறிகளை விவசாயிகள் கொண்டு வருவர் என எதிர்பார்க்கப்பட்டது.ஆனால், நடப்பாண்டு பருவமழை ஏமாற்றியதால் காய்கறிகள் உற்பத்தி கடும் வீழ்ச்சியடைந்தது. அதனால், பண்டிகை நாளான நேற்று முன்தினமும், நேற்றும் வழக்கம்போல் கொண்டு வரும் காய்கறிகளைதான் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.நேற்று முன்தினம் ஆயுதபூஜையையொட்டி, 115 டன் காய்கறிகள், பூக்கள், பழங்களை விற்பனைக்கு கொண்டு வந்தனர். நேற்று விஜயதசமியையொட்டி, 107 டன் காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை மட்டுமே விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதனால், காய்கறிகள், பூக்கள் மற்றும் பழங்கள் விலை திடீரென உயர்ந்தது. குறிப்பாக தேங்காய், பழங்கள் விலை மற்ற நாட்களை விட, 25 சதவீதம் அதிகமாக விற்பனையானது.

## ஸ்ரீவில்லிபுத்தூரில் வெங்காயம் விலை கிடு கிடு

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில் வெங்காயத்தின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூரில் பிள்ளையார்நத்தம், பூவாணி, குன்னூர், மல்லி, வங்காருபட்டி பகுதியில், வெங்காயம் பயிர் செய்யப்படுகிறது. கடந்த சில மாதங்களாக மழை பெய்யாததால், எவ்வித விவசாயமும் இல்லை. கடந்த ஜனவரியில் வெங்காயத்தின் விலை கிலோ 2 ரூபாய்க்கும் குறைவாக விற்கப்பட்டது. தற்போது கடந்த வாரம் 38 ரூபாயாக இருந்த வெங்காயம் ,தற்போது 42 ரூபாயாக உயர்ந்துள்ளது. தீபாவளி நேரத்தில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. வியாபாரி ஒருவர் கூறுகையில்,"" ஜனவரியில் இருப்பு வைத்தவர்கள் தான், தற்போது விற்பனை செய்கின்றனர். மழை தொடர்ந்து பெய்து வருவதால் விலை உயர்ந்துள்ளது. தீபாவளி நேரத்தில் கிலோ 50 ரூபாய்க்கு சென்றாலும் ஆச்சரியபட வேண்டியதில்லை," என்றார்.

## பயறு வகைதிடல் ஆய்வு

பழநி:கணக்கன்பட்டி பகுதியில் விவசாயிகள் நித்தியானந்தம், சிவப்பிரகாசம் ஆகியோரது நடவு முறை துவரை செயல்விளக்கத் திடல்கள் உள்ளன. இதனையும் எரமநாயக்கன்பட்டியில் மானாவாரி இருபோக சாகுபடி மக்காசோளம் பயறுவகை திடல்களையும் இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.வேளாண்மை உதவி இயக்குனர் வெள்ளைச்சாமி மற்றும் வேளாண் அலுவலர்கள் உடனிருந்தனர்

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

25.10.2012 P.M

26.10.2012 A.M

## சென்னை ஏரிகளின் நீர்மட்டம் விவரம்



சென்னை : சென்னை மாநகருக்கு பூண்டி, செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் ஆகிய 4 ஏரிகளில் இருந்து குடிநீர் வழங்கப்படுகிறது. நேற்று காலை நிலவரப்படி நீர் இருப்பு வருமாறு: பூண்டி ஏரி: பூண்டி ஏரியின் கொள்ளளவு 3,231 மில்லியன் கன அடி. தற்போது 679 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. நீர்வரத்து வினாடிக்கு 264 கன அடி. சென்னை குடி நீருக்காக பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு வினாடிக்கு 233 கன அடி திறக்கப்பட்டுள்ளது.

புழல் ஏரி: புழல் ஏரியின் கொள்ளளவு 3,300 மில்லியன் கன அடி. தற்போது தண்ணீர் இருப்பு 1795 மில்லியன் கன அடி. ஏரிக்கு வினாடிக்கு 211 கன அடி நீர் வருகிறது. சென்னை குடிநீருக்காக வினாடிக்கு 176 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. செம்பரம்பாக்கம்: செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3,645 மில்லியன் கன அடி. தற்போது தண்ணீர் இருப்பு 1098 மில்லியன் கன அடி. ஏரிக்கு நீர் வரத்து வினாடிக்கு 90 கன அடி. சென்னை குடிநீருக்காக வினாடிக்கு 90 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

சோழவரம்: இந்த ஏரியின் கொள்ளளவு 881 மில்லியன் கன அடி. தண்ணீர் இருப்பு 193 மில்லியன் கன அடி. நீர் வரத்து வினாடிக்கு 35 கன அடி.

## வீணாகும் உணவுப்பொருட்கள் மூலம் 50 கோடி பேருக்கு உணவளிக்கலாம்



நியுயார்க் : ஐ.நா. சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (எப்ஏஓ) இயக்குநர் ஜோஸ் கிரஜியானோ டாசில்வா வெளியிட்டுள்ள அறிக்கை: உலக அளவில் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு உணவுப்பொருட்கள் வீணாக்கப்படுகிறது. இதுபோன்ற வீணாக்கலை தடுப்பதன் மூலம் வறுமை ஒழிப்புக்கான இலக்கை அடைய முடியும். தற்போது உலக அளவில் வீணாகப்படும் உணவுப்பொருட்கள் மூலம், எந்தவித கூடுதல் முயற்சியோ,

இயற்கை ஆதாரங்களை அழிக்காமலோ 50 கோடி பேரின் பசியை தீர்க்க முடியும். நமது வாழ்நாள் காலத்திலேயே இதுபோன்ற உணவுப்பொருட்கள் வீணாக்கலை தடுத்து நிறுத்துவதற்கு உணவுத்துறையில் சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும். இதன் மூலம் வறுமை ஒழிப்பு இலக்கையும் அடைய முடியும்.

உணவுப்பொருட்கள் வீணாக்கலுக்கு முக்கிய காரணம், நடுத்தர மற்றும் உயர் வருவாய் கொண்ட நாடுகளில், கூடுதலாக உணவுகளை எடுத்துக் கொள்ளும் பழக்கம்தான். இதன் விளைவு 150 கோடி பேர் கூடுதல் உடல் எடையுடன் உள்ளனர். ஆனால், அதேசமயம் சரியான உணவு கிடைக்காமல் 86 கோடி 80 லட்சம் பேர் ஊட்டச்சத்து குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். உணவுப்பொருட்கள் வீணாக்கலை தடுத்து நிறுத்தும் வகையில், உலக நாடுகள் அனைத்தும் விவசாயப் பொருட்களை சேமித்து வைக்கும் கிடங்குகளை அதிகரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

**சர்க்கரை இறக்குமதி வரி 3 மாதத்துக்கு பின் உயரும்**



டெல்லி : சர்க்கரை இறக்குமதி மீதான சுங்க வரியை உயர்த்துவது குறித்து, 3 மாதங்களுக்கு பின்பு முடிவெடுக்கப்படும் என்று மத்திய விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார். சர்க்கரை உற்பத்திக்கு ஏற்ப, அதன் ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கிறது. அதே போல், தேவைக்காக சர்க்கரை இறக்குமதி செய்யும் போது, அதன் மீது 10 சதவீத சுங்க வரி விதிக்கப்படுகிறது. உள்ளூர் சர்க்கரைக்கு விலை கிடைக்கும் வகையில், சர்க்கரை இறக்குமதி வரியை 20 சதவீதமாக உயர்த்த உணவு அமைச்சகம் பரிசீலித்து வருகிறது.

இது பற்றி, விவசாயத் துறை அமைச்சர் சரத் பவார் நேற்று கூறுகையில், 'எவ்வளவு கரும்பு அரவைக்கு வருகிறது? எவ்வளவு சர்க்கரை உற்பத்தி ஆகிறது என்பதை கவனிக்க வேண்டும். இதற்கு 3 மாதங்கள் காத்திருக்க வேண்டும். அதன்பின்பே, சர்க்கரை இறக்குமதி மீதான வரியை உயர்த்துவது பற்றி முடிவெடுக்கப்படும்' என்றார்.

25th oct 2012 P.M

**இறந்த கறவை மாடுகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் விழா**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் இப்கோ -டோக்கியோ இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இதன் மூலம் தனிநபர் விபத்து காப்பீடு, ஜனதா பீமா யோஜனா, கறவை மாடு கடன்கள் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. அந்த வகையில், காஞ்சிபுரம் அருகே மேலேரிபாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில், இறந்த கறவை மாடுகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் விழா நடந்தது. காஞ்சிபுரம் மண்டல இணை பதிவாளர் திருநாவுக்கரசு தலைமை வகித்து, விவசாயி வேதகிரிக்கு இழப்பீடு தொகையாக ரூ25000 வழங்கினார்.

இந்தாண்டு 5 கூட்டுறவு சங்கங்கள் மூலம் 8 பயனாளிகளுக்கு கறவை மாடுக்கான இழப்பீடு தொகையாக ரூ1.65 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. பல்லாவரம் கிளை சார்பில் தனிநபர் விபத்து காப்பீடாக ரூ1 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இதில், சங்க செயலாளர் ஜெயசீலன் மற்றும் இன்சூரன்ஸ், கூட்டுறவு சங்க அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்மழையால் 500 ஏக்கர் சம்பா நெல்பயிர் மூழ்கி சேதம்**

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் 8வது நாளாக தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. விளை நிலங்களை தண்ணீர் சூழ்ந்து சம்பா நெல்பயிர் கள் மூழ்கி சேதமாகியுள் ளது. இதனால் விவசாயி கள் கவலை அடைந்து உள் ளனர்.

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 17ம் தேதி துவங்கிய மழை, இடைவிடாது பெய்து வருகிறது. கடந்த 2 நாட்களாக மழையின் தாக்கம் குறைந்து காணப்பட்டது.

நேற்று முன்தினம் முதல் மீண்டும் மழை தீவிரம் அடைந்துள்ளது. 8வது நாளாக தொடர்ந்து கொட்டி வரும் மழையால், மாவட்டத்தில் உள்ள கோமுகி, மணிமுக்தா, வீடூர், சாத்தனூர் அணை கள் வேகமாக நிரம்பி வருகின்றன. ஓடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆழங்கால் வாய்க்காலில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஏரி, பாசன கால்வாய்கள் தூர்வாரப்படாததால் விவசாய நிலங்களை தண்ணீர் சூழ்ந்து உள்ளது. சம்பா பயிர்கள் தண்ணீரில் மிதக்கின்றன. நிலங்களில் சூழ்ந்துள்ள மழை நீரை விவசாயிகள் மோட்டார் வைத்து வெளியேற்றி வருகின்றனர். விழுப்புரம் அருகே உள்ள ஆனாங்கூர் ஏரி கடந்த ஆண்டு வெள்ளத்தின் போது மதகு சேதமடைந்தது. இதை சரி செய்ய ரூ. 2.5 லட்சம் ஒதுக் கீடு செய்யப்பட்டு பணி நடந்தது. ஆனால் மதகு சீரமைக்கும் பணிகள் முடிக்காததால் தற்போது பெய்த மழையால் ஏரியில் மழைநீர் தங்காமல் வயல்வெளிகளில் சூழ்ந்துள்ளது. இதனால் சுமார் 500 ஏக்கருக்கு மேல் சம்பா பயிர்கள் மூழ்கி சேதமாகியுள்ளது. நாற்றங்காலும் மூழ்கி வீணாகி வருகிறது. இத னால் விவசாயிகள் கடுமை யாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுபோல் மாவட்டத்தில் உள்ள பல ஏரிகள் தூர்வாரப்படாததாலும், பாசன கால்வாய் கள் சரிசெய்யாத தாலும் மழை நீர் சேகரிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்துவருவதால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது. விழுப்புரம் புதிய பேருந்து நிலையம், இந்திராநகர், அண்ணா நகர், கீழ்பெரும்பாக்கம் சுரங்கப்பாதை, நகராட்சி மைதானம், மாவட்ட விளையாட்டு

அரங்கம், முத்தோப்பு, அகரம்பாட்டை, பாப்பான் குளம் போன்ற இடங்களில் மழை நீர் தேங்கி குளம் போல் காட்சி அளிக்கிறது. ஒரு சில பகுதிகளில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந் தது. நேற்று காலை நிலவரப்படி மாவட்டம் முழுவதும் சராசரியாக 4.8 செ.மீ மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக திருக்கோவிலூரில் 8 செமீ மழை அளவு பதிவாகியுள்ளது

**திருந்திய நெல் சாகுபடியில் கமுதி பகுதியில் முதன் முதலாக இயந்திரம் மூலம் நெல்நடவுப்பணி**

கமுதி, : கமுதி வட்டாரப் பகுதியில் முதன்முதலாக நெல் நடும் பணி இயந்திரம் மூலம் செய்யப்பட்டது. இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சக்தி மோகன் கூறுகையில், கமுதி வட்டார அளவில் திருந்திய நெல் சாகுபடியில் நெல் பயிரிடும் பணிகளுக்காக முதன் முதலாக இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஒரு ஏக்கருக்கு நெல்விதை இரண்டு முதல் மூன்று கிலோ போதுமான
தாகும்.
ஒரு ஏக்காருக்கான நாற்றாங்கால் ஒரு செண்ட் அளவு போதுமானது. திருந்திய நெல் சாகுபடியில் இயந்திரம் கொண்டு வரிசைக்கு வரிசையாக 22.5 செ.மீ இடைவெளியில் நெல் நடவு செய்யப்படுகிறது.
திருந்திய நெல் சாகுபடியில் பயிருக்கு போதுமான அளவு இடைவெளி கிடைப்பதுடன பயிர்கள் அதிகளவு தூர்களைப் பிடித்து கதிர்கள் அதிகளவு கிடைத்து மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இம்முறை விவசாயிகளிடம் இப்பகுதியில், முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திருந்திய நெல்சாகுபடி முறை கமுதி அருகே உள்ள அபிராமம் வடக்கூர் விவசாயி சுபாஸ்சந்திரபோஸ் என்பவருக்குச் சொந்தமான வயலில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்து இப்பகுதி விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் விளக்கம் பெற்றனர் என்றார்.
இதில், வட்டார வேளாண்மை துணை அலுவலர் சேதுராம், விதைச்சான்று அலுவலர் முருகேசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் சின்னச்சாமி, முனியாண்டி, பழனிவேல்ராஜன் மற்றும் கதிரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தக்காளி , வெங்காயம் விலை மீண்டும் ‘கிடுகிடு ’**

மதுரை, : வரத்து குறைவால் மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் தக்காளி, வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த சில நாட்கள் வரை அனைத்து காய்கறிகளின் விலையும் சராசரியாக விற்கப்பட்டு வந்தன. வடகிழக்கு பருவமழையால் தக்காளி, சின்னவெங்காயம் வரத்து குறைந்துள்ளதால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்றைய காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு: (கிலோ ரூபாய் மதிப்பில்):

நாட்டுத்தக்காளி-25, கத்தரிக்காய்-20, வெண்டைக்காய்-15, பல்லாரி-20, சின்னவெங்காயம்-45, உருளை- 30, கருணை- 20, சேனை- 20, சேப்பங்கிழங்கு- 30, காரட்- 30, பீட்ரூட்- 15, பட்டர்பீன்ஸ் -80, சோயாபீன்ஸ்- 60, பச்சை பட்டாணி- 120, முருங்கை பீன்ஸ்- 40, நூக்கல்- 20, முள்ளங்கி- 15, அவரை- 40, மிளகாய்- 20, சுரைக்காய்- 15, சவ்சவ்- 15, சீனி அவரைக்காய்- 15, வெள்ளைபூசணி- 6, சர்க்கரை பூசணி- 6, கருவேப்பிலை- 20, கொத்தமல்லி- 30, புதினா- 10, காலிபிளவர்- 20, பீர்க்கங்காய்- 25, முட்டைக்கோஸ்- 10, புடலங்காய்- 20, சின்னபாகற்காய்- 50, பெரிய பாகற்காய்- 25, இஞ்சி- 45, கீரை வகைகள்- 15.

மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில் ‘வடகிழக்கு பருவமழையால் தக்காளி வரத்து குறைந்துள்ளது. கடந்த வாரம் வரை கிலோ ரூ.10க்கு விற்கப்பட்ட தக்காளி நேற்று கிலோ ரூ.25 ஆக விலை உயர்ந்துள்ளது. அதேபோல் வெங்காயத்தின் விலை கிலோவிற்கு ரூ.20 அதிகரித்துள்ளது,’’ என்றார்.

**மீனவர் வாழ்வாதாரம் மேம்பட பூண்டி ஏரியில் மீன் வளர்க்க 64 மிதவை கூண்டு அமைப்பு அதிகாரி தகவல்**

திருவள்ளூர், : பூண்டி ஏரியில் மீன் வளர்க்க 64 மிதவை கூண்டுகள் அமைக்கப்பட உள்ளதாக மீன்வளத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சிறப்பு திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. நாடு முழுவதும் உள்ள நீர்த் தேக்கங்களில் மீன் குஞ்சுகளை வளர்த்து அதில் கிடைக்கும் லாபத்தின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழக மீன்வளத்துறையின் அங்கமான மீன்வள தொழில்நுட்ப பயிற்சி நிலையம் சார்பில் இந்த திட்டத்தை செயல்படுத்தி மக்களுக்கு மீன்களின் புரதச்சத்து அதிகமாக கிடைக்கவும் ஏற்பாடு செய்து வருகிறது.

தமிழகத்தில் முதல்முறையாக பூண்டி நீர்த்தேக்கத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்த மீன்வள தொழில்நுட்ப பயிற்சி நிலையத்துக்கு ரூ.3 கோடியே 25 லட்சம் நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் பூண்டி ஏரியில் மீன் வளர்க்க 64 மிதவை கூண்டுகள் பொருத்தும் பணி நடக்கிறது.

முதல்கட்டமாக 16 மிதவை கூண்டுகளில் மீன் குஞ்சுகளை வளர்ப்பதற்கும், 2 மாதத்தில் மீன் வளர்ந்தவுடன் பெரிய மீன்களுக்காக 48 மிதவை கூண்டுகளும் அமைக்கப்பட உள்ளன. மிதவை கூண்டு மூலம் வளர்ப்பதால் மீன்களுக்கு எந்த நோய் வந்தாலும் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க முடியும். கூண்டில் எந்த மீன்வகையை வளர்க்கிறோம் என்பதை அறிய முடியும். தேவைப்படும்போது மீனை பிடிக்கலாம். இதன் மூலம் மக்களுக்கோ, குடிநீருக்கோ எந்த பாதிப்பும் இருக்காது. மிதவை கூண்டுகளில் வளர்ப்பதால் மீன்களின் இறப்பு குறைவாக இருக்கும். மத்திய அரசு ஒதுக்கீடு செய்த நிதியில் கூண்டு அமைக்க ரூ.1 கோடியே 25 லட்சம், மீன்கள் தீவனத்துக்கு ரூ.1 கோடி, மீன் குஞ்சி வாங்க ரூ.5 லட்சம் செலவிடப்படுகிறது. மிதவை மீன் கூண்டு அமைக்கும் பணி முடிந்ததும், உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மீன்வளர்க்க பயிற்சி அளிக்கப்படும். கூண்டில் உள்ள மீன் 800 கிராம் வரை வளரும். அதை பிடித்து விற்பனை செய்து அதில் கிடைக்கும் லாபத்தை மீனவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மிதவை கூண்டில் அமரு கெண்டை, பைலட் ஜிலேபியா, பங்காசியஸ், காமன் கார்ப் என்ற சாதா கெண்டை ஆகிய மீன்கள் வளர்க்கப்பட உள்ளதாக மீன் வளத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

26.10.2012 A.M

**மழைகாலங்களில் ஆடு, மாடு, கோழிகளை பராமரிக்கும் முறை**
**கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் அறிவி பு**

மழைகாலங்களில் ஆடு, மாடு, கோழிகளை பராமரிக்கும் முறை குறித்து கால்நடை மருத்துவ பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் அறிவித்து உள்ளது.

கறவை மாடு

தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிரு பதாவது—

பருவமழை ஆரம்பமாவதை முன்னிட்டு கறவை மாடு வளக்கும் ப ணையாளர்கள் தங்கள் மாடுகளை மழை ர் தேங்காத, மேடான இடங்களில் கட்டி கவனமாக பாதுகாத்துக்கொள்ளுதல் வே டும்.

தானியம், தவிடு, பு ணாக்கு போன்றவற்றை ஈரம் ஆகாமல் பாதுகா பதன் மூலம் பூஞ்சைக்காளான் ஏற்படுவதை தடுக்கலாம். கொட்டகையை ஈரம் இல்லாமல் பராமரி பதன் மூலம் மடிநோய், கழிச்சல் வராமல் தடுக்கலாம். மாடு, மற்றும் இளங்கன்றுகளை காலை வேளையில் ஈரமான புற்களை மேய அனுமதிக்கக்கூடாது. மழைக்கால நோய்களுக்கான தடு பூசி முகாம்களில் தவறாமல் கலந்து கொ டு பயன்பெற வே டும்.

ஆடு, கோழி

வெள்ளாடு வளர் போர் ஆட்டு கொட்டகையை ஈரமில்லாமல் பராமரிக்க வே டும். மழை ரால் மிகவும் பாதி படைவதால் மேய்ச்சல் குறைந்து உடல்நலம் குன்றி இறக்க நேரிடும். ஆகையால் காய்ந்த மர இலைகள், கடலைக்கொடி, சோளத்தட்டை போன்றவற்றை அளிக்கலாம். சினை ற்ற, குட்டி ஈன்ற ஆடுகளுக்கு ஒரு ஆட்டிற்கு 100 கிராம் என்ற அளவில் தவிடு, தானியம் கலந்த அடர் தீவனம் அளிக்கலாம்.

மழைக்கால நோய்களுக்கான தடு பூசி முகாம்களில் தவறாமல் கலந்து பயன்பெற வே டும்.

நாட்டுக்கோழி வளர் பவர்கள் பருவமழைக்காலத்தில் கோழிகளில் வெள்ளைக்கழிச்சல் வருவதற்கு அதிக வாய் புள்ளதால் நோய்களுக்கான தடு பூசியினை கால்நடை மருந்தகங்களில் தவறாமல் போட்டுக்கொள்ள வே டும். தானியம், தவிடு, பு ணாக்கு போன்றவற்றை ஈரமாகாமல் பாதுகா பதன் மூலம் பூஞ்சைக்காளான் வழி நோய்களை தடுக்கலாம். கொட்டகையை ஈரம் இல்லமல் பராமரிக்கும் போது ரத்தக்கழிச்சல் வராமல் தடுக்கலாம்.

இவ்வாறு அதில் கூற பட்டு உள்ளது.

**11 ஆ யிரம் ஏக்கர் விவசாய பாசனத்துக்கு**
**கோமுகி அணையில் த    ணீர் திற  பு**
**அமைச்சர் ப.மோகன் திறந்து வைத்தார்**

11 ஆயிரம் ஏக்கர் விவசாய பாசனத்துக்கு கோமுகி அணை பாசன வாய்க்காலை அமைச்சர் ப.மோகன் திறந்துவைத்தார்.

பாசனத்துக்கு த    ணீர் திற  பு

விழு  புரம் மாவட்டம் கச்சிராய பாளையம் அருகே கோமுகி அணை உள்ளது. இங்கு கடந்த சில வாரங்களாக பெய்த தொடர் மழையால் அணையின்  ர்மட்டம் நேற்று முன்தினம் 44 அடியை எட்டியது. இதையடுத்து கச்சி ராய  பாளையம், வடக்கனந் தல் பகுதியில் உள்ள 10,860 ஏக்கர் விவசாய பாசனத்துக்கு த    ணீர் திறந்துவிட தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.அதன்பேரில் பாசன வாய்க்காலில் த    ணீர் திறக்கும் நிகழ்ச்சி நேற்று காலை 10.45 மணியளவில் கோமுகி அணையில் நடை பெற்றது. விழாவுக்கு ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன் தலைமை தாங்கி னார். மாவட்ட கலெக்டர் சம்பத், கள்ளக்குறிச்சி சட்ட மன்ற உறு பினர் அழகுவேல் பாபு, மாவட்ட வருவாய் அதிகாரி பிருந்தாதேவி, ஊரக வளர்ச்சித்துறை திட்ட இயக்குனர் முத்துமீனாள், பொது பணித்துறை செயற் பொறியாளர் ( ர் ஆதாரம்) சின்னராஜ் ஆகியோர் முன் னிலை வகித்தனர். கள்ளக் குறிச்சி உதவி செயற்பொறி யாளர் முரளிதரன் வர வேற்றார்.

நிகழ்ச்சியில் பாசன வாய்க்கால் மதகுக்கு தேங்காய் உடைத்து, கற்பூரம் கா    பித்து சிற  பு பூஜை நடந்தது. தொடர்ந்து அணை மதகை அமைச்சர் ப.மோகன், மாவட்ட கலெக்டர் சம்பத், அழகுவேல் பாபு ஏம்.எல்.ஏ., ஆகியோர் திறந்துவைத்தனர். இதையடுத்து வாய்க்காலில் சீறி பாய்ந்த   ரில் நவதானியங்கள் தூவி வணங்கினர்.

அ  போது அமைச்சர் ப.மோகன் கூறுகையில், இ  பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தமிழக முதல்–அமைச்சர் கோமுகி அணையில் த    ணீர் திறக்க உத்தரவிட்டார். அதன்படி அணை திறக்க பட்டுள்ளது. இதற்கு இ  பகுதி மக்கள், விவசாயிகள் சார்பில் முதல்–அமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

110 கனஅடி திற  பு

அணை வாய்க்காலில் அடுத்த 15 நாட்களுக்கு (நவம்பர் 8–ந் தேதி வரை) பழைய பாசன ஆற்றில் 60 கனஅடி  ம், புதிய பாசன வாய்க்காலில் 50 கனஅடி த    ணீரும் வினாடிக்கு திறக்க படுகிறது. நவம்பர் 8–ந் தேதியில் இருந்து அடுத்த 45 நாட்களுக்கு பழைய பாசன வாய்க்காலில் 120 கனஅடி  ம், புதிய பாசன வாய்க்காலில் 100 கனஅடி  ம் த    ணீர் திறக் க படும். இதன்மூலம் புதிய பாசன திட்டத்தில் 7 கிராமங் களை சேர்ந்த 5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலமும், பழைய பாசன திட்டத்தில் 11 அணைகட்டுகள் உள்பட 33 கிராமங்களில் உள்ள 5,860 ஏக்கர் விவசாய நிலமும் பாசன வசதிபெறுகிறது.

கலந்துகொ டவர்கள்

நிகழ்ச்சியில் கள்ளக்குறிச்சி உதவி கலெக்டர் ராஜசேகரன், சின்னசேலம் தாசில்தார் வைகு டவரதன், ஒன்றியக் குழு தலைவர்கள் ராஜசேகர், வெள்ளி, ராஜேந்திரன், அரசு, கள்ளக்குறிச்சி நகராட்சி தலைவர் பாலகிருஷ்ணன், வடக்கனந்தல் பேரூராட்சி தலைவர் வெங்கடேசன், அ.தி.மு.க. ஒன்றிய செய லாளர்கள் ஆ பிள், அ ணா மலை, கதிர்த டபாணி, நகர செயலாளர்கள் பாபு, கரு பன், குணசேகரன், நாராயணன், பொது பணித்துறை பொறி யாளர்கள் செல்வகாந்தி, நாரா யணன், அருணகிரி, கந்தவேல், சம்பத், (மின்சாரம்) டக்ளஸ், வேளா மை இணை இயக்குனர் சேகர், உதவி இயக்குனர்கள் தர்மலிங்கம், கோவிந்தன், வேளா அலுவலர்கள் சரவணன், பொன்னுராஜ், விவசாய சங்க நிர்வாகிகள் காமராஜ், க ணன், தைலான், ராமசாமி, லட்சுமணன் மற்றும் அரசு ஊழியர்கள், விவசாயிகள், ஊராட்சிமன்ற தலைவர்கள், கட்சி நிர்வாகிகள் கலந்து கொ டனர்.